**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: S.T.C. 8/2018**
**Deposition of witness for prosecution -DW-4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரமேஷ்குமார் |
| Father Name | : | திரு.சீனிவாசகம் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | BDO, இராமநாதபுரம் |
| Religion | : | இந்து |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 29th day of December 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் BDO-ஆக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் இருந்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு சாட்சியம் அளிக்க சம்மன் வழங்கப்பட்டுள்ளது. அவர் சார்பாக நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் 2011 ம் வருடம் ஆர்.எஸ்.மடை பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் போட்டியிடும்போது அவரால் தாக்கல் செய்யப்பட்ட சொத்து விபரம் மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சாட்சி அழைப்பாணை வழங்கப்பட்டிருந்தது. முனீஸ்வரி என்பவர் 2011 ம் வருடம் ஆர்.எஸ்.மடை தலைவர் பதவிக்கு போட்டியிட்டு உள்ளார். அந்த சமயத்தில் அவரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் தேர்தல் முடிந்து 6 மாதம் கழித்து தமிழ்நாடு பஞ்சாயத்து (தேர்தல்) விதி 1995, பிரிவு 68 ன்படி அழிக்க வேண்டும் என்று (G.O.Ms.No.143 Rural Development, Dated: 07/08/1995)-ன்படி 2016 ல் நடந்த தேர்தலின்போது அவரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டது. அந்த G.O.Ms. No-ன் நகல் எ.ம.த.சா.ஆ.3 ஆகும். அதனால் இந்த வழக்கில் கோரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்.